

# மெட்ரோ ரெயில்களில் ஆக்சிஜன் கலந்த கிருமிநாசினி தெளிப்பு

சென்னை, அக்.22–

கொரோனா கால ஊரடங்கு தளர்வுகளை தொடர்ந்து கடந்த மாதம் 7–ந்தேதியில் இருந்து சென்னையில் மெட்ரோ ரெயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. நோய் பரவாமல் தடுக்க மத்திய, மாநில அரசுகள் பிறப்பித்துள்ள பல்வேறு வழிகாட்டுதல்களின் அடிப்படையில் ரெயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது நாட்டிலேயே முதன் முறையாக கிருமிநாசினியில் உள்ள வேதியியல் பொருட்களால் கேடுவிளைவிக்காத நீர் வடிவிலான கிருமிநாசினி பயன்படுத்தப்படுகிறது.

இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், 'கிருமிநாசினியில் உள்ள வேதியியல் பொருட்களால் பயணிகள் பாதிக்காமல் இருப்பதற்காக இ.டி.ஏ. என்ற நவீன தொழில்நுட்பம் மூலம் வெளிப்படும் ஆக்சிஜன் கலந்த நுண்ணிய நிறமற்ற திரவ வடிவிலான கிருமிநாசினி பயன்படுத்தப்படுகிறது. இதனால், கேடு விளைவிக்கும் வேதியியல் தன்மை முற்றிலும் தவிர்க்கப்படுகிறது. இதை பயன்படுத்தும்போது கைகளில் மட்டுமல்ல சுற்றுப்புறப்பகுதிகளிலும் காற்றின் மூலம் கிருமிகள் மற்றும் வேதியியல் பொருட்கள் பரவலும் தடுக்கப்படுகிறது.

பயணிகள் தும்மும்போதும், இருமும்போதும் வெளியாகும் நீர்த்துளிகளில் இருந்து வெளிப்படும் கிருமிகள் மட்டுமல்ல சுற்றுப்புறங்களில் காற்றில் கலந்த கிருமிகளையும் கொல்லக்கூடியதாகும்' என்று கூறினார்கள்.